**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீயினதும் (''வங்கி'') கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனி மற்றும் தொகுதியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 1 வருடம் முதல் ஐந்து வருட காலப்பகுதிக்கும் மேல் நீண்டகாலமாக பெறவேண்டிய நிலுவை மீதிகளின் மொத்தம் ரூபா 56,554,386 இருந்தன. | **பிங்காரா டொவ்ன் & கன்ட்ரி க்ளப்**<br><br>சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை நிலையில் உள்ளது. நிலுவைக் காலப்பகுதியைக் கருத்திற் கொண்டு நிதிக்கூற்றுக்களில் முழுமையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>**ஆதன வியாபார பெறவேண்டிய முற்பணம் - அம்பிடிய**<br><br>2023 இல் ஏற்கனவே ரூபா 238,200 அறவிடப்பட்டுள்ளது. 2023 இன் இறுதியளவில் ரூபா 402,513 மீதியினை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நீண்டகாலமாக பெறவேண்டிய நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

**ஊழியரகளிடம் இருந்து பெறவேண்டியவை**

* கந்தானை மோசடி வழக்கு - ரூபா 37,160,419.48

ஊழியருக்கு எதிராக நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் சட்ட வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கானது விசாரணை கட்டத்தில் உள்ளது.

நிலுவைக் காலப்பகுதியைக் கருத்திற் கொண்டு நிதிக்கூற்றுக்களில் முழுமையான ஏற்பாடு ரூபா 37.16 மில்லியனை கம்பனி மேற்கொண்டுள்ளது.

* திரு. பாக்யவிடமிருந்து (சிலாபம் கிளை) பெற வேண்டிய ரூபா 235,580.96

நிலுவை மீதியினை அறவிடுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக மீதியினை அறவிடுவதற்காக 2023 ஆம் ஆண்டில் முழுமையான ஏற்பாடு மேற்கொள்ளப்படும்.

* அனுராதபுர அடகு மோசடி - ரூபா 4,995,491.87

நிலுவையினை அறவிடுவதற்காக அனுராதபுர மாவட்ட நீதிமன்றத்தில் மோசடியில் ஈடுபட்ட ஊழியருக்கு எதிராக நீதிமன்ற வழக்கொன்று நடைபெற்று வருகின்றது.

இதற்கிடையில், பெறப்பட்ட காப்புறுதி பெறுமதி மற்றும் கம்பனியின் உடமையில் உள்ள தங்க உருப்படிகளின் சந்தைப் பெறுமதி என்பவற்றை கருத்திற்கொண்ட பின்னர் ரூபா 2,879,488 ஏற்பாடடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* காலி கிளை - ரூபா 296,000 - முன்னாள் கிளை முகாமையாளர் திரு. நிலங்க என்பவரிடமிருந்து பெற வேண்டியவை

தொகையினை அறவிடுவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருகின்றன. இதற்கு மேலதிகமாக தொகை மற்றும் காலப்பகுதி என்பவற்றினை கருத்திற்கொண்டு சட்ட அறிவுரை எடுக்கப்படும்..

* ஈசீஓ கபன (ECO Cabana) இன் கடன் தீர்த்தல் - ரூபா 2,673,905.65

காலி எஸ்சீஐபி (SCIB) இல் நடவடிக்கை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு இறுதிக் கட்டத்தில் உள்ளது.

* ரூபா 839,950.94

வேறுபாடு முழுமையாக வழங்கப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வு பிரிவின் பரிந்துரை பெற்ற பின்னர் தீர்க்கப்படும்.

* வென்னப்புவ கிளை - ரூபா 1,347,300

வழக்கு திரும்பப் பெறப்பட்டு வாகனம் விற்பனை செய்யப்பட்டது. கம்பனி கொள்கையின் பிரகாரம் மீதியனை பதிவளிப்பு செய்ய வேண்டியுள்ளது.

* மாத்தறை கிளை- (ரூபா.15,000)

2023 இல் ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளது.

### 1.5.2 செலுத்த வேண்டியவைகள்

**கணக்காய்வு விடயம்**

(i) 1 வருடம் முதல் ஐந்து வருட காலப்பகுதிக்கும் மேலாக நிலுவையாக உள்ள இனங்காணப்படாத நேரடி வைப்பு, சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு, வாடிக்கையாளர் சேகரிப்பு கணக்கு மற்றும் சம்பள கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகியன தொடர்பாக நீண்டகால நிலுவை மீதிகளின் மொத்தம் ரூபா 154,783,481 அவதானிக்கப்பட்டது. நீண்டகாலமாக செலுத்த வேண்டிய நிலுவை மீதிகளின் வயதுப் பகுப்பாய்வு பின்வரும் அட்டவணையில் வழங்கப்படுகின்றது.

| | நிலுவைக் காலப்பகுதி (வருடங்கள்) | | | | |
|---|---|---|---|---|---|
| விபரம் | 0-1 (ரூபா' மில்லியன்) | 1-3 (ரூபா' மில்லியன்) | 3-5 (ரூபா' மில்லியன்) | 05 வருடங்களுக்கு மேல் (ரூபா' மில்லியன்) | மொத்தம் (ரூபா' மில்லியன்) |
| இனங்காணப் படாத நேரடி வைப்புக்கள் | 2.83 | 4.53 | 5.15 | 6.38 | 18.89 |
| சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு | 0.54 | 1.37 | 0.49 | 1.67 | 4.07 |
| வாடிக்கையாளர் சேகரிப்பு கணக்கு | 5.48 | 1.30 | 0.53 | 100.03 | 107.34 |
| சம்பள கட்டுப்பாட்டுக் கணக்கு | 23.62 | 0.63 | 0.19 | 0.04 | 24.48 |
| **மொத்தம்** | **32.48** | **7.83** | **6.36** | **108.12** | **154.78** |

**முகாமைத்துவ கருத்துரை**

**இனங்காணப்படாத நேரடி வைப்புக்கள்**

கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டது. இவைகள் வாடிக்கையாளர்களினால் குறிப்பு பகுதியில் எவ்விதமான அடையாளமின்றி மேற்கொள்ளப்பட்ட நேரடி வைப்புக்களாகும். சபை அங்கீகரித்த நீண்டகால நிலுவை மீதிகளினை தீர்த்தல் கொள்கையின் பிரகாரம் நீண்டகால நிலுவை மீதிகளினை தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக ஏதாவது நீண்டகால நிலுவை மீதிகளினை நியாயப்படுத்தலுடன் குறுகிய காலப்பகுதிக்குள் தீர்ப்பதற்கு கொள்கையானது திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

**சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு**

நிதிப் பிரிவு தீர்ப்பனவு செய்வதற்காக உரிய பிரிவுகளுடன் தொடர்ச்சியாக பின்பற்றுகின்றது. 6

**பரிந்துரை**

நீண்டகாலமாக செலுத்தவேண்டிய நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மற்றும் கம்பனியின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்றுவதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது.

மாதங்களுக்கு பின்னர் எஞ்சியிருக்கும் ஏதாவது மீதியினை கொடுக்கப்பட்டுள்ள பொதுப் பேரேட்டுக்கு மாற்றப்படுகின்றன.

சபை அங்கீகரித்த நீண்டகால நிலுவை மீதிகளினை தீர்ப்பனவு செய்தல் கொள்கையின் பிரகாரம் நீண்டகால நிலுவை மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

**வாடிக்கையாளர் சேகரிப்பு கணக்கு**

மொத்த மீதியில், எம்எஸ்பி (MSB) இல் முதலீட்டிற்காக ரூபா 100 மில்லியன் நவாரா கெபிடல் (Navara Capital) இடமிருந்து பெறப்பட்ட முற்பண நிதிகளுடன் தொடர்புடையதாகும். விதிமுறைகளினை மீறியதன் காரணமாக உடன்பட்ட முதலீடு நடைபெறவில்லை. அதன் பின்னர் நவாரா கெபிடல் (Navara Capital) செலுத்திய முற்பணத்தினை மீளப்பெறுவதற்காக சட்ட நடவடிக்கையொன்றினை தாக்கல் செய்தது. சட்ட வழக்கு இறுதிக் கட்டத்தில் உள்ளது. சட்ட வழக்கு முடிவடையும் வரை மீதி பேணப்பட வேண்டியுள்ளது. இந்த தொகை வாடிக்கையாளர் சேகரிப்பு அல்ல என்பதனால் மீதியினை வியாபார கடன்கொடுத்தோர் கணக்கு ஒன்றிற்கு மாற்றப்படும்.

ஏனைய மீதிகள் தீர்ப்பனவு செய்வதற்கான வாடிக்கையாளர் சேகரிப்புடன் தொடர்புபடுவதோடு ஒப்பந்தங்களின் தீர்த்தல் உடன் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

கம்பனி கொள்கையின் பிரகாரம் ஏதேனும் நீண்ட

காலமாக செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்படும்.

**சம்பள கட்டுப்பாட்டுக் கணக்கு**

கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டது. ஏற்கனவே 2017 முதல் 2020 வரையான மீதிகள் தீர்க்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாக செலுத்த வேண்டிய ஏனைய மீதிகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.

(ii) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மடம்பெல்ல ஆதன வியாபரம் மற்றும் மாரவில ஆதன வியாபரம் ஆகிய இரண்டும் முழுமையாக விற்பனை செய்யப்பட்ட போதிலும் மடம்பெல்ல ஆதன வியாபரம் மற்றும் மாரவில ஆதன வியாபரம் ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் முறையே ரூபா 1,099,770 மற்றும் ரூபா 1,789,893 தொகைகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அட்டுறு செலவினங்கள் ரூபா 27,453,987 (பொ.பே இல. 20108) தொகையினுள் உள்ளடங்கியுள்ளது. (2021 ஆம் ஆண்டில் இவ்விரு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன)

***மடம்பெல்ல***

நிதிக்கூற்றுக்களில் இருந்து ஏற்கனவே ரூபா 1,099,770 மீதி தீர்க்கப்பட்டுள்ளது.

***மாரவில***

கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டது. 2023.11.10 திகதியளவில் ரூபா 1,789,893 மீதி திரும்பல் செய்யப்படும்.

காணிகள் முழுமையாக விற்பனை செய்யப்பட்டுள்ளமையினால் இந்த தொகை மீதிகளினை தீர்வு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

### 1.5.3 முற்பணங்கள்

**கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை**

(i) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் செலுத்த வேண்டிய மூலதனம் மற்றும் வட்டி மீதிகள் ரூபா 1,241.46 இருந்தன.

| இ ல. | வாடிக்கையாளரின் பெயர் | செலுத்த வேண்டிய மூலதனம் (ரூ.மில்லியன்) | செலுத்த வேண்டிய வட்டி (ரூ.மில்லியன்) | மொத்தம் (ரூ.மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | ஏ பி ஏ ஜுவலரி (பிறைவட்) லிமிட்டட் | 193.98 | 68.12 | 262.10 |
| 2 | எம்ஏஜீ ஸ்டோரேஜ் பெட்டரி (பிறைவட்) லிமிட்டட் | 139.76 | 183.62 | 323.38 |
| 3 | வோகர்ஸ் சன்ஸ் & கம்பனி என்ஜினியர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் | 79.75 | 28.74 | 108.49 |

***1. ஏ பி ஏ ஜுவலரி (பிறைவட்) லிமிட்டட்***

2023 இல் ஏற்கனவே ரூபா 60 மில்லியன் சேகரிக்கப்பட்டுள்ளது. வசதியினை முழுமையாக தீர்த்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

புதிய முதலீட்டாளர் ஒருவர் வணிகத்தினை மதிப்பிடும் செயற்பாட்டில் உள்ளார். முதலீட்டாளருடன் தீர்ப்பனவு செய்யும் பேச்சுவார்த்தைகள் செயன்முன்னேற்றத்தில் உள்ளது.

***2. எம்ஏஜீ ஸ்டோரேஜ் பெட்டரி (பிறைவட்) லிமிட்டட்***

வாடிக்கையாளர்களிடம் இருந்து மொத்த நிலுவைத் தொகைகளினை அறவிடுவதற்கு கம்பனியினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | சதெர்ன் க்ருப் சிவில் கன்ஸ்ட்ரக்ஸன் (பிறைவட்) லிமிட்டட் | 79.24 | 7.65 | 86.89 |
| 5 | தயா க்ருப் (பிறைவட்) லிமிட்டட் | 78.02 | 47.08 | 125.10 |
| 6 | ஓஆர்யூ மிக்ஸ் அஸ்போல்ட் (பிறைவட்) லிமிட்டட் | 56.82 | 69.55 | 126.37 |
| 7 | ப்ளான்டேஷன் டெவலப்மன்ட் & மனேஜ்மன்ட் (பிறைவட்) லிமிட்டட் | 52.12 | 23.75 | 75.87 |
| 8 | கலாநிதி. யூ.ஜீ.ஏ.பெர்னான்டோ | 38.64 | 6.96 | 45.60 |
| 9 | சிகிரிய வைஸ்ரோய் ஹோட்டல் (பிறைவட்) லிமிட்டட் | 33.84 | 23.82 | 57.66 |
| 10 | அனுர மேன் பவர் சப்ளையேர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் | 30.0 | 0.00 | 30.0 |
| **மொத்தம்** | | **782.17** | **459.29** | **1,241.46** |

சட்ட நடவடிக்கைகள் விசாரணை கட்டத்தில் உள்ளது. தீர்த்தலுக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதுடன் தீர்த்தலுக்கான முன்மொழிவுகள் இயக்குனர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இறுதி உடன்படிக்கை இதுவரை எட்டப்படவில்லை.

3. ***வோகர்ஸ் சன்ஸ் & கம்பனி என்ஜினியர்ஸ் (பிறைவட்) லிமிட்டட***

முடிவுறுத்தியமைக்காக எமது வாடிக்கையாளருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எம்பிஎஸ்எல் (MBSL) பதிலியை தாக்கல் செய்ததுடன் முடிவுறுத்தல் விண்ணப்பத்தினை ஆதரிப்பதற்கான வழக்கிற்கு தலையிட்டது. விண்ணப்பத்தினை நிராகரித்து 2022.02.24 ஆம் திகதிய முடிவுறுத்தல் கட்டளை அனுப்பப்பட்டது.

அடகு வைக்கப்பட்டுள்ள சொத்தினை அகற்றுவதன் மூலம் தீர்த்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

***4. சதெர்ன் க்ருப் சிவில் கன்ஸ்ட்ரக்ஸன் (பிறைவட்) லிமிட்டட்***

2023 இல் வசதியானது முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளது.

***5. தயா க்ருப் (பிறைவட்) லிமிட்டட்***

சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய முகவரியில் இல்லாததன் காரணமாக அழைப்பானை அனுப்ப முடியாதுள்ளது.

இதற்கிடையில் தீர்த்தலுக்காக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றது.

***6. ஓஆர்யூ மிக்ஸ் அஸ்போல்ட் (பிறைவட்) லிமிட்டட்***

நீதிப்பேராணை தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற மதிப்பீடும் பெறப்பட்டுள்ளது.

2023 இல் ரூபா 40 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் மாதாந்த தவணைக்கொடுப்பனவு முறையில் மீளசெலுத்துவதன் மூலம் வசதியினை தீர்த்துக்கொள்ள உடன்பட்டுள்ளார்.

***7. ப்ளான்டேஷன் டெவலப்மன்ட் ரு் மனேஜ்மன்ட் (பிறைவட்) லிமிட்டட்***

வாடிக்கையாளரினை கண்டுபிடிக்க முடியாததன் காரணமாக தற்போது சட்ட நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கடன் வாங்கியவரை கண்டறிவதற்கு ஏனைய தெரிவுகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

***8. கலாநிதி. யூ.ஜீ.ஏ.பெர்னான்டோ***

சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நடவடிக்கை விசாரணைக் கட்டத்தில் உள்ளது. கடன் வாங்கியவர் வழக்கறிஞர் ஊடாக தீர்த்தல் திட்டமொன்றிற்காக உறுதியளித்தார் மற்றும் எம்பிஎஸ்எல் (MBSL) அதனை செயற்படுத்தி வருகின்றது.

***9. சிகிரிய வைஸ்ரோய் ஹோட்டல் (பிறைவட்) லிமிட்டட்***

நீதிப்பேராணை பெறப்பட்டுள்ளது. ஆதனத்தில் தற்போது வசிப்பவரால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு காரணமாக நீதிப்பேராணை செயற்படுத்தல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் தீர்த்தல் தொடர்பாக மேலதிக பேரம்

பேசலுக்காக உடன்பட்டுள்ளார். எனினும் இன்று வரை தீர்த்தல் எட்டப்படவில்லை.

***10. அனுர மேன் பவர் சப்ளையேர்ஸ் (பிறைவட்) லிமிட்டட்***

ஈடு வைக்கப்பட்டவை கம்பனியினால் கையகப்படுத்தப்பட்டது. ஆதனம் விற்பனைக்காக உள்ளதுடன் செலுத்த வேண்டிய தொகை ஆதனம் அகற்றப்பட்டவுடன் தீர்க்கப்படும்.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2006 இன் 4 ஆம் இலக்க நிதி கம்பனிகள் வழிகாட்டலின் 5 ஆம் பிரிவு (தனிக் கடன் பெறுபவர் வரம்பு) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதான மூலதனத்தின் (ரூபா 36.71 மில்லியன்) 1 சதவீதத்தினை விஞ்சி MBSL இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டட்டிற்கு ரூபா 55 மில்லியன் தொகையான பாதுகாப்பற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்கியதன் மூலம் கம்பனி குறிப்பிடப்பட்ட வழிகாட்டலை மீறியுள்ளது. | கருத்துரை குறித்துக் கொள்ளபபட்டது. 2023 இல் குறிப்பபிடப்பட்ட வசதி தீர்க்கப்பட்டது. | குறிப்பிடப்பட்டுள்ள வழகாட்டலுடன் இணங்குவது அவசியமாகும். |
| (ii) | 2018 இன் 3 ஆம் இலக்க நிதி வணிக சட்ட வழிகாட்டலின் 1 ஆம் பிரிவு (மூலதன போதுமான தேவைப்பாடு) | மேற்காட்டப்பட்டுள்ள வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த மட்ட பிரமாணத்திற்கு மேல் மூலதன போதுமான தேவைப்பாடு விகிதங்களினை பராமரிப்பதற்கு கம்பனி தவறியுள்ளது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த மூலதன போதுமான தேவைப்பாடு விகிதம் (CARs) 12.01 சதவீதமாக இருந்தது. இது ஆகக்குறைந்த பிரமாண தேவைப்பாடான 12.5 சதவீதத்தினை விட குறைவாகும். | கருத்துரை குறித்துக் கொள்ளபபட்டது. தற்போது கம்பனி மூலதன போதுமான தேவைப்பாடு (CAR) இணங்குகின்றது. | குறிப்பிடப்பட்டுள்ள வழகாட்டலுடன் இணங்குவது அவசியமாகும். |
| (iii) | கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பட்டியலிடுதல் விதிகளின் | 2021 ஒக்தோபர் 1 இல் உரித்து வழங்கல் மூலம் 358,655,096 பங்குகள் பட்டியலிடப்பட்டதன் அடிப்படையில், 2021 நவம்பர் 1 | கருத்துரை குறித்துக் கொள்ளபபட்டது. 2023 ஏப்ரல் 26 ஆம் திகதியிலிருந்து | குறிப்பிடப்பட்டுள்ள வழகாட்டலுடன் இணங்குவது அவசியமாகும். |

| | | |
|---|---|---|
| விதி இல. 7.14.2 | முதல் நடைமுறைக்கு வரும் குறைந்தபட்ச பொது வைத்திருத்தல் தேவைப்பாட்டின் 20 சதவீதத்துடன் இணங்கவில்லை. கம்பனியின் புதிய உரித்து வழங்கல் காரணமாக கம்பனியின் பொது பங்குகள் 15.50 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. | நடைமுறைக்கு வரும் வகையில் திரி சவி சபைக்கு பங்குகளினை மாற்றியதன் மூலம் விடயம் சரி செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 495.6 மில்லியன் நட்டமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 529 மில்லியனாக காணப்பட்டது. ஆகையினால் நிதி விளைவுகளில் ரூபா 1,024.6 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் தேறிய வட்டி வருமானம் ரூபா 1,094.9 மில்லியனால் குறைவடைந்தமை, ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 142 மில்லியினால் குறைவடைந்தமை மற்றும் கடன்களிற்கான நட்டக்கழிவுக் கட்டணம் மற்றும் ஏனைய சொத்துக்களும் ரூபா 91 மில்லியனால் அதிகரித்தமை என்பன வீழ்ச்சியடைந்தடைக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | 2022 (ரூபா ’000) | 2021 (ரூபா ’000) | மாற்றம் (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| வட்டி மற்றும் ஒத்த வருமானம் | 6,451,083 | 5,525,955 | 16.74 | பிரதானமாக கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதி முதலீடுகள் அதிகரித்ததன் காரணமான வட்டி வருமானம் அதிகரித்துள்ளது. |
| வட்டி மற்றும் ஒத்த செலவினங்கள் | 4,695,684 | 2,675,588 | 75.50 | கம்பனியின் வைப்பு அடிப்படை மற்றும் கடன்கள் அதிகரித்ததன் காரணமாக வட்டிச் செலவினம் அதிகரித்துள்ளது. |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 129,157 | 189,929 | 58.78 | பிரதானமாக வியாபார மற்றும் ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகள் குறைவடைந்ததன் காரணமாக கட்டணம் மற்றும் தரகு வருமானம் குறைவடைந்துள்ளது. |
| தேறிய வியாபார வருமானம் | 2,255 | 44,281 | 94.90 | இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்களை அகற்றுதல் மீதான ஆதாயம்/(நட்டம்) குறைவடைந்ததன் காரணமாக தேறிய வியாபார வருமானம் குறைவடைந்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 92,229 | 234,335 | 60.64 | ஆதனம் மற்றும் உபகரணங்களை அகற்றல் மீதான ஆதாயம், பங்கிலாப வருமானம், ஆதன வியாபாரத்தில் (real estate) இருந்தான இலாபம் மற்றும் நட்டங்கள் மற்றும் ஏனைய வருமானம் குறைவடைந்ததன் காரணமாக ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் குறைவு ஏற்பட்டது. |
| கடன்களுக்கான நட்டக்கழிவு கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | 16,504 | (74,450) | 122.2 | பிரதானமாக தனிநபரின் குறிப்பிடத்தக்க கடன்கள் மீதான நட்டக்கழிவு மற்றும் பதிவளித்தல் அதிகரித்தமை காரணமாக கடனுக்கான நட்டக்கழிவுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் அதிகரித்துள்ளன. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கிய விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட துறை விகிதங்களின் ஒப்பீட்டுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **துறை விகிதம் *** | **கம்பனி** | |
|---|---|---|---|
| | | **2022** | **2021** |
| **செயலாற்றல் விகிதங்கள்** | | | |
| உரிமை மீதான திரும்பல் (ROE) | 7.37 | (12.60) | 18.77 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) | 2.56 | (1.51) | 1.59 |
| வட்டி எல்லை | 6.69 | 5.85 | 9.42 |
| **சொத்துக்கள் தர விகிதம்** | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் (NPL) | 17.41 | 17.77 | 15.92 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | |
| தட்டு மூலதனம் (ஆகக் குறைந்தது 8.5%) | 20.56 | 11.33 | 10.75 |
| மொத்த மூலதனம் (ஆகக் குறைந்தது 12.5%) | 21.99 | 12.01 | 11.33 |
| **நியதிச்சட்ட விகிதம்** | | | |
| திரவச் சொத்துக்கள் விகிதம் | 10.68 | 13.41 | 12.92 |

*** நிதித் துறை – உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் இணைய தளத்திலிருந்து துறை விகிதங்கள் பெறப்பட்டன.**

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | கம்பனியின் பணிப்பாளர் சபை நீண்டகாலமாக நிலுவையாக உள்ள திரட்டிய ரூபா 7,815,340 பொதுப் பேரேட்டு (பொ.பே) செலவு மீதிகளினை மீள்பதிவதற்கும் (write back), நீண்டகாலமாக நிலுவையாக உள்ள திரட்டிய ரூபா 2,167,507 பொதுப் பேரேட்டு (பொ.பே) வரவு மீதிகளினை (கடன்கள் மற்றும் முற்பணங்கள் தவிர) | கம்பனி பின்பற்றுகின்ற கம்பனி கொள்கையின் மூலம் ரூபா 7,815,339.89 தொகையினை மீள்பதிந்ததுடன் நீண்டகாலமாக நிலுவையாக உள்ள பொதுப்பேரேட்டு மீதி ரூபா 2,167,506.99 தொகையினை பதிவளிப்பு செய்துள்ளது. | பதிவளித்தல் காரணமாக கம்பனிக்கு சாத்தியமான நட்டங்களினை குறைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | பதிவழிப்பதற்கும் 2022 ஆம் ஆண்டின் போது அங்கீகாரம் அளித்துள்ளது. | கொள்கையினை பின்பற்றுவதற்கு முன் தீர்வுசெய்வதற்கான அனைத்து தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>சபை அங்கீகரித்த நீண்டகால நிலுவை மீதிகளினை தீர்த்தல் கொள்கைக்கு ஏற்ப நீண்டகால நிலுவை செலவு மற்றும் வரவு மீதிகளினை மீள்பதிதல் மற்றும் பதிவளித்தலினை கம்பனி கருத்திற் கொள்கின்றது. அதற்கிணங்க 5 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள நீண்டகால நிலுவை மீதிகளினை மீள்பதிந்துள்ளதுடன் பதிவளிப்பும் செய்துள்ளது. இலாப நட்டத்திற்கான தேறிய தாக்கமானது ரூபா 5,647,832.90 வருமானமாக இருந்தது. | |
| (ii) | மீளாய்வாண்டில் அறவீடு செய்யக்கூடிய இயலாமை காரணமாக கம்பனி 8,493 எண்ணிக்கையிலான செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களை மொத்தமாக ரூபா 982,556,008 பதிவழித்துள்ளது. | கலவையின் (portfolio) சொத்து தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் பதிவளித்தல் கொள்கையின் பிரகாரம் பதிவளித்தல் நடைமுறை செயற்படுத்தப்பட்டது. பதிவளித்தல் செய்வதற்கு முன்பாக இந்த செயற்பாடற்ற கடன்களினை அறவீடு செய்வதற்கான சகல சாத்தியமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது மற்றும் இது கடைசி தெரிவாக நிறைவேற்றப்பட்டது. எனினும், பதிவளிப்பு செய்யப்பட்ட வசதிகளினை அறவீடு செய்து கொள்வதற்காக விஷேட அறவீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. | பதிவளித்தலுக்கு முன்பாக கடன்கள் மற்றும் முற்பணங்களினை அறவிடுவதற்கு ஒவ்வொரு சாத்தியமான முயற்சியினை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

<table>
<tr><th>இல.</th><th>கணக்காய்வு விடயம்</th><th>முகாமைத்துவ கருத்துரை</th><th>பரிந்துரை</th></tr>
<tr><td>(i)</td><td>2022 ஆம் ஆண்டின் போது பறிமுதல் செய்யப்பட்ட 96 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் 43 வாகனங்களின் விற்பனை வருமானத்தில் இருந்து குத்தகை நிலுவை மீதி ரூபா 61,565,170 அறவிடப்பட்டிருக்க வேண்டும். எனினும் விற்பனை மூலம் ரூபா 44,113,139 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் வாகனங்களினை அகற்றிய பின்னர் வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா 17,452,030 அறவிடப்படவேண்டியுள்ளது. வாடிக்கையாளர்களிடம் இருந்து மேற்குறிப்பிட்ட தொகையினை அறவிடமுடியாமல் போனால் கம்பனி நட்டத்தை சந்திக்க நேரிடலாம் என்பது அவதானிக்கபட்டது. இந்த அறிக்கையின் பின்னிணைப்பு I ஐப் பார்க்கவும்.</td><td>வாகன தரிப்பிட செயற்பாடுகள் நடைமுறையில் வழங்கப்பட்டுள்ள அளவுருக்களினுள் கம்பனி அதன் மீளப் பெற்ற வாகனங்களினை அகற்றியது. சொத்துக்களினை தேறல் செய்யும் வேளையில் நிலவுகின்ற மோசமான நேரத்தின் போது எப்போதும் சாத்தியமான பொருளாதார முடிவு இருக்கிறது மற்றும் அறவீட்டு செயன்முறை மூலம் வாடிக்கையாளர்களிடமிருந்து பற்றாக்குறையானது அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என கருதி அகற்றல் தீர்மானம் எடுக்கப்படுகிறது.</td><td>பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் விற்பனையினால் கம்பனிக்கு நட்டங்களினை குறைக்க நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>(ii)</td><td>பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களினை தரிப்பிடத்தில் இருந்து அகற்றும் போது குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட 156 வாகனங்களில் 90 வாகனங்கள் அங்கே காணப்பட்டன. இது பல ஆண்டுகளாக அதிக பராமரிப்புக் கிரயங்கள் ஏற்படக்கூடும் என்பதோடு சந்தைப் பெறுமதி குறைவதன் காரணமாக நட்டங்களும் ஏற்படலாம். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
<table>
<tr><th>தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காலம்</th><th>வாகனங்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1 – 3 வருடங்கள்</td><td>13</td></tr>
<tr><td>3 – 5 வருடங்கள்</td><td>32</td></tr>
<tr><td>5 வருடங்களுக்கும் மேல்</td><td>45</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>90</td></tr>
</table></td><td>பட்டியலில் உள்ள 90 வாகனங்களில் 54 வாகனங்கள் நீதிமன்ற பிணைப்பில் உள்ளதுடன் நீதிமன்றங்களினால் பிணைப்பு ரத்து செய்யப்படும் வரை இந்த வாகனங்களினை அகற்ற முடியாதுள்ளது. வாடிக்கையாளர்களிடம் இருந்து செயலிலுள்ள ஆர்எம்வி (RMV) ஆட்சேபனைகள் காரணமாக 5 வாகனங்களினை அகற்ற முடியாதுள்ளது. ஆட்சேபனைகள் ரத்து செய்யப்பட்ட பிற்பாடு அந்த வாகனங்கள் அகற்றப்படும் மற்றும் பட்டியலில் உள்ள 11 வாகனங்கள் அதன் பின்னர் அகற்றப்பட்டன மற்றும் / அல்லது விடுவிக்கப்பட்டன. எனினும் அங்கே காணப்படும் 20 வாகனங்கள் அவ்வாகனங்களின் தற்போதைய நிலைமை காரணமாக நிறுவனத்திற்கு பாரிய நட்டம் ஏற்படாமல் அகற்றப்படவில்லை மற்றும் அத்தகைய வாகனங்கள் அகற்றல் தீர்மானத்தின் வரன்முறையினை பூர்த்தி</td><td>நீதிமன்றத்தின் மூலம் பிணையினை தீர்வுசெய்வதற்கு ஒவ்வொரு முயற்சியினை எடுப்பதற்கும் கம்பனிக்கு குறைந்தளவான நட்டம் ஏற்படும் வண்ணம் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களினை அகற்றுவதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | செய்யவில்லை. மாற்றுத் தெரிவொன்றாக இயக்குனர் சபையின் அங்கீகாரமானது நீண்டகாலமாக வைத்திருக்கும் வாகனங்களினை ஏலம் விடுவதற்கான விதமாகும். | |
| (iii) | 2022 ஆம் ஆண்டின் போது 96 வாகனங்களினை மீளப் பெற்று விற்பனை செய்துள்ளது. எனினும் மேற்குறிப்பிட்ட 96 வாகனங்களில் 67 வாகனங்கள் மதிப்பீட்டு அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள கட்டாய விற்பனைப் பெறுமதியை விட குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கம்பனிக்கு மொத்த நட்டமாக ரூபா 17,818,600 இருந்தது. | வாகன தரிப்பிட செயற்பாடுகள் நடைமுறையில் வழங்கப்பட்டுள்ள அளவுருக்களினுள் கம்பனி அதன் மீளப் பெற்ற வாகனங்களினை அகற்றியது. இந்த ஏற்பாடுகளின் கீழ் வாகனங்களின் கட்டாய விற்பனை விலையினை விட குறைவாக முனைவு பெறப்பட்ட சூழ்நிலையின் போது அகற்றல் குழு அகற்றல் முடிவொன்றிற்கு வரும்.<br><br>மீளாய்வு காலப்பகுயின் போது வாகனங்களின் விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக தொடர்ச்சியான அரசியல் ஸ்திரமின்மை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வாகனங்களின் கட்டாய விற்பனை பெறுமதியில் அகற்ற முடியவில்லை. எனினும், கட்டாய விற்பனை பெறமதியினை விட 20 சதவீதம் குறைவாக வாகனங்கள் அகற்றப்பட்ட போதிலும் கம்பனியினால் பெரும்பாலும் அனைத்து வாகனங்களினையும் பரிவர்த்தனை இலாபத்தில் விற்பனை செய்ய முடிந்தது. கொள்கையின் பிரகாரம் அகற்றல் குழு கட்டாய விற்பனை விலையில் 80 சதவீதத்திற்கு மேல் வாகனங்களினை அகற்றுவதற்கு தீர்மானித்தது. | கம்பனிக்கு சாத்தியமான நட்டங்களினை குறைக்கும் வகையில் விவேகமான முறையில் தீர்மானம் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iv) | கம்பனி 2022 ஆம் ஆண்டின் போது மாரவில ஆதன வியாபார செயற்திட்டத்தின் கீழ் 07 தொகுதிகளும் மடம்பெல்ல ஆதன | ***<u>மாரவில மற்றும் மடம்பெல்ல</u>***<br>நாங்கள் மாரவில மற்றும் மடம்பெல்ல என்பவற்றுக்காக மதிப்பீட்டு அறிக்கையினை | கம்பனிக்கு சாத்தியமான நட்டங்களினை குறைக்கும் வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | வியாபார செயற்திட்டத்தின் கீழ் 19 தொகுதிகளும் விற்பனை செய்துள்ளது. எனினும், மாரவில ஆதன வியாபார செயற்திட்டம் மற்றும் மடம்பெல்ல ஆதன வியாபார செயற்திட்டம் என்பவற்றின் ஒவ்வொன்றும் 03 தொகுதிகள் சந்தைப்பெறுமதி மற்றும் மதிப்பீட்டு அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள கட்டாய விற்பனைப்பெறுமதி என்பவற்றினை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மொத்த விளைவாக ரூபா 1,768,500 கணிப்பிடப்பட்டுள்ளது (விற்பனைப் பெறுமதி மற்றும் கட்டாய விற்பனைப் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு). | முறையே 2020 செப்தெம்பர் 09 மற்றும் 2020 ஒக்தோபர் 02 இல் பெற்றோம். 2020 மார்ச் முதல் 2021 நவம்பர் வரை நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக மாரவில மற்றும் மடம்பெல்ல தொகுதிக்காக மிகவும் குறைந்த கேள்வி காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஒற்றையான வடிவம் மற்றும் குறுகிய அணுகல் வீதி காரணமாக மடம்பெல்ல தொகுதிக்காக மிகவும் குறைந்த கேள்வி காணப்பட்டது. அதனால் நாங்கள் நியாயமான விலையில் 02 செயற்திட்டத்தின் தொகுதிகளினை அகற்ற வேண்டியிருந்தது. நாங்கள் மதிப்பீட்டு அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள சந்தைப் பெறுமதி மற்றும் கட்டாய விற்பனைப் பெறுமதி என்பவற்றை விட குறைந்த விலையில் இந்த தொகுதிகளினை விற்பனை செய்த போதிலும் சபை அங்கீகரிக்கப்பட்ட ஒரு பெர்ச்சிக்கான (perch) சராசரி விலையினை விட கூடிய விலையில் இந்த தொகுதிகளினை விற்பனை செய்தோம். | விவேகமான முறையில் தீர்மானம் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (v) | கம்பனியானது 2018 முதல் 2021 வரை குறிப்பிட்ட ஒரு வாடிக்கையாளருக்கு பல தடவை குறுகிய தவணை கடன்கள், தவணைக் கடன்கள், சலுகைக் கடன் வசதிகள் என்பவற்றினை வழங்கியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளரின் தொடர்ச்சியற்ற கொடுப்பனவு முறைமை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சலுகை நிவாரண நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கு அமைவாக கம்பனியானது மேற்கூறிய அனைத்து கடன்களினையும் ஒரே கடனாக ரூபா 38,644,244 இற்கு மாற்றியதன் மூலம் வசதிகளினை மீள்கட்டமைத்தது. மீள்கட்டமைக்கப்பட்ட வசதி தொடர்பாக பின்வரும் அதவானங்கள் | இலங்கை மத்திய வங்கி பரிந்துரைத்த நிவாரணப் பொதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட வசதி மீள்கட்டமைக்கபட்டது. தொற்றுநோய் நிலைமை மற்றும் பாதகமான பொருளாதார நிலைமைகள் வாடிக்கையாளரை மோசமாக பாதித்தன. சலுகைக்கால நிவாரணப் பொதிகளின் கீழ் வசதி மாற்றியமைக்கப்பட்டதனால் எங்களது வழக்கமான கடன் மதிப்பீட்டினை நாங்கள் கைவிட வேண்டியிருந்தது. ஏனைய தெரிவொன்றாக பணத்தினை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு | வாடிக்கையாளர் அல்லது உத்தரவாதம் அளித்தவரிடமிருந்து மொத்த நிலுவை தொகையினை அறவிடுவதற்கு கமபனியினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்படுகிறது. |

மேற்கொள்ளப்பட்டன.

- கடன் நடைமுறை கையேட்டின் பிரகாரம் மீள்கட்டமைக்கப்பட்ட செயன்முறைக்குள் நுழைவதற்கு முன்பாக கடன் பெற்றவரின் மீள்கொடுப்பனவு இயலளவினை கம்பனி மதிப்பீடு செய்திருக்கவில்லை.
- கடன் பெற்றவரின் திருப்தியற்ற சீஆர்ஐபி (CRIB) வரலாறு கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- சபை பத்திர இல. CBU/2021/606/016 இன் பிரகாரம் வணிக செயல்திறன் மீது காலத்திற்கு காலம் மீளாய்வுகள் நடத்தப்பட்டு பிற் கடன் கண்காணிப்பு அலகினால் கடன் குழுவிற்கு அறிக்கை செய்யப்பட்டிருக்கவில்லலை.
- உத்தரவாதம் அளிப்பவரின் மாதாந்த வருமானதினை நியாயப்படுத்துவதற்கு எவ்வித நம்பகரமான ஆதார சான்றுகள் பெறப்படவில்லை.
- கம்பனியினால் உத்தரவாதம் அளித்தவரினை அணுக முடியாமை காரணமாக உத்தரவாதம் அளித்தவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

காணப்படக்கூடிய ஆவணங்களுடன் மீள்கட்டமைப்பு செய்யப்பட்டது. சலுகைக்கால நிவாரண திட்டத்தின் கீழ் வசதியானது மீள்கட்டமைக்கப்பட்டதில் இருந்து நாட்டு நிலைமை காரணமாக 2020 இன் 05 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி சுற்றறிக்கையின் 4(iii) ஆம் இலக்க பிரிவின் மூலம் அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுத்தல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீள்கொடுப்பனவு ஆரம்பிப்பதற்கு 03 மாத கால ஆரம்ப கருணை காலப்பகுதியுடன் மேறகுறிப்பிட்ட வசதியின் மீள்கட்டமைப்பு 2022 திசெம்பர் இல் வழங்கப்பட்ட போதிலும் வாக்குறுதி அளிக்கப்பட்டதன் படி முதல் வாடகையில் இருந்து வாடிக்கையாளர் நிலுவை வாடகைகளினை செலுத்தவில்லை. நாங்கள் 2022 பெப்ரவரி மாதத்தில் இருந்து வாடிக்கையாளரை தொடர்புகொள்ள முயற்சித்த போதிலும் அவர் அவைகளுக்கு பதிலளிக்கவில்லை. கடனாக வழங்கப்பட்ட பணத்தினை அறவீடு செய்வதற்கு அறவீட்டு நடவடிக்கை ஆரம்பிப்பதை விட மேலதிக மீளாய்வு மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று நாங்கள் கருதினோம். அதன்படி 2022 யூலை 05 ஆம் திகதியில் வசதி முடிவுறுத்தப்பட்டதுடன் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்ட திணைக்களத்திற்கு கோவை மாற்றப்பட்டது. கூறப்பட்ட கோரிக்கை கடிதத்திற்கு வாடிக்கையாளரிடம் இருந்து ஆக்கபூர்வமான பதில் பெறப்படாமையினால்

| | | | |
|---|---|---|---|
| | | இல. HC/Civil/7/2023 பிறப்பித்து நடவடிக்கை ஒன்று கூறப்பட்ட வாடிக்கையாளருக்கு எதிராக அண்ணளவாக அல்லது 2023 சனவரி 16 இல் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டதுடன் வழக்கு நடைபெற்று வருகின்றது. | |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வசதி செயல்பாடற்றமையாக மாறியதன் காரணமாக கடன்களுக்கு எதிராக ஈடுவைக்கப்பட்ட ஆதனங்கள் கையகப்படுத்தப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களில் இவைகள் முதலீட்டு ஆதனங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கம்பனியினால் கையகப்படுத்தப்பட்டு முதலீட்டு ஆதனங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ஐந்து (05) அடகு வைக்கப்பட்ட ஆதனங்கள் முன்னைய நில உடமையாளர்களுடன் காணப்படுகின்ற சட்ட சூழ்நிலை காரணமாக கம்பனிக்கு உடமை கொள்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளன. கம்பனி அடகு வைக்கும் வேளையில் ஆதனங்களின் சட்ட உரிமையினை கவனத்திற்கொள்ளவில்லை. | முதலீட்டு ஆதனங்களாக இச்சொத்துக்கள் அடையாளங்காணப்பட்ட நேரத்தில் கம்பனிக்கு சொத்துக்களுக்கான தெளிவான உரிமை இருந்தது மற்றும் சட்ட வழக்குகள் காணப்படவில்லை. இச்சொத்துக்களுக்கான சட்ட உரிமையினை பெற்ற பின்னர் சட்ட வழக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆகையினால், இது சொத்து அடையாளம் காணப்படும் வரன்முறைக்கு ஏற்ப உள்ளது.<br><br>மேலதிகமாக, இதன் தற்போதைய நிலையினை கருத்திற்கொண்டு ரூபா 6.05 மில்லியன் ஏற்பாடொன்று நிதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சட்ட அனுமதி பெற்ற பின்பு ஒரு விளைதிறனான முறையில் முதலீட்டு ஆதனங்களினை பயன்படுத்துவதற்கும் மற்றும் கடன்களினை வழங்கும் போது ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் சட்ட பின்னனியினை நிச்சயித்துக் கொள்வதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | பெறப்பட்ட திகதியில் இருந்து முதலீட்டு ஆதனங்கள் மீது எவ்வித வருமானமும் ஈட்டப்படாத போதிலும் கணக்காய்வு திகதியான 2023 ஏப்ரல் 30 வரை சட்ட செலவினங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு என்வற்றுக்காக முறையே ரூபா 40.8 மில்லியன் மற்றும் ரூபா 9.5 மில்லியன் தொகை கம்பனியினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்காணியும் கட்டிடங்களும் தற்போதும் எவ்வித பயன்பாடின்றி காணப்படுகின்றன. | எம்பிஎஸ்எல் (MBSL) இறுதி நிதியாண்டின் போது இந்த முதலீட்டு ஆதனங்களினை அபிவிருத்தி செய்வதற்கு, வருமானம் ஈட்டுவதற்கு அல்லது அகற்றுவதற்கு நிலுவையிலுள்ள சட்ட வழக்குகள் காரணமாக முடியாமல் இருந்தது. சகல இச்சொத்துக்களும் எம்பிஎஸ்எல் (MBSL) இனால் உரிமையாக்கப்பட்டுள்ளது, எனினும் முன்னைய நில உரிமையாளர்களுடன் காணப்படும் சட்ட வழக்குகளின் படி ஆதனங்களின் பௌதீக உரிமையினை எம்பிஎஸ்எல் (MBSL) பெற முடியாதுள்ளது. எனினும் சட்ட கட்டணங்கள் | கடன் வழங்கலின் ஆரம்பத்தில் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் சட்ட அனுமதியினை திருப்தியடைவதன் மூலம் சட்ட கட்டணத்தினை குறைத்துக் கொள்வதற்கும் மற்றும் இந்த ஆதனங்களின் மூலம் வருமானத்தினை ஈட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | மற்றும் கட்டிடங்களுக்கான பெறுமானத்தேய்வானது அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்ட கட்டணங்கள் மற்றும் ஏனைய செலவீனங்கள் பாதுகாப்பிற்காகவும் கம்பனி சொத்தினை பராமரிப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. | |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

<table>
<tr><th>இல.</th><th>கணக்காய்வு விடயம்</th><th>முகாமைத்துவ கருத்துரை</th><th>பரிந்துரை</th></tr>
<tr><td>(i)</td><td>2022 ஆம் நிதியாண்டிற்கான கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,274 ஊழியர்களாக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான உண்மையான பதவியணினர் 896 ஆக காணப்பட்டது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதினான்கு (14) வேலை வகைகளில் 504 எண்ணிக்கையிலான பதவிநிலைகள் வெற்றிடமாக காணப்பட்ட அதே வேளை இரண்டு (02) வேலை வகைகளில் மேலதிகமாக 126 எண்ணிக்கையிலான ஊழியர்கள் காணப்பட்டனர் என்பது அவதானிக்கப்பட்டது. எனவே 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக அங்கீகரிக்கப்பட்ட பதிவியணியினரில் 29.6 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 378 எண்ணிக்கையிலான ஊழியர்கள் வெற்றிடமாக காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டது.<br>பின்வரும் அட்டவணையில் விபரங்கள் விவரிக்கப்படுகின்றன.
<table>
<tr><th>விபரம்</th><th>ஊழியர்களின் எண்ணிக்கை</th><th>சதவீதம் %</th></tr>
<tr><td>அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர</td><td>1274</td><td>-</td></tr>
<tr><td>உண்மையான பதவியணியினர்</td><td>896</td><td>-</td></tr>
<tr><td>14 எண்ணிக்கையிலான பதவிநிலை∴ பதவி – குறைவு (அ)</td><td>504</td><td>39.5</td></tr>
<tr><td>02 எண்ணிக்கையிலான பதவிநிலை∴ பதவி – மேலதிகம் (ஆ)</td><td>(126)</td><td>9.8</td></tr>
<tr><td>ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை</td><td>378</td><td></td></tr>
</table>
</td><td>தலைமை அலுவலகத்தின் திணைக்களத்தினது தற்போதுள்ள கட்டமைப்பு மீளாய்வு செய்யப்படுவதுடன் ஆண்டு இறுதியளவில் இறுதியாக் கப்படும். எனினும் வீச்சு மற்றும் கிளைக் கட்டமைப்புக்கள் ஏற்கனவே இறுதியாக்கப்பட்டுள்து.</td><td>கம்பனியின் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக வெற்றிட பதவிநிலைகளிற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுகப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>(ii)</td><td>2022 ஆம் ஆண்டின் போது 148 எண்ணிக்கையிலான ஊழியர்கள் கம்பனியில் இருந்து நீங்கிச் சென்றுள்ளனர்.</td><td>கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டது. பணியாளரை தக்க வைத்துக் கொள்வதற்கான</td><td>கம்பனியின் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சராசரி எண்ணிக்கையிலான ஊழியர்களில் 15.8 சதவீதத்தினை பிரதிபலிக்கின்றது. இது மீளாய்வாண்டின் போதான கம்பனியின் உயர் ஊழியர் புரள்வினை குறிப்பிடுகின்றது. | நடவடிக்கை அமுல்படுத்தப்படுகிறது. தற்போதைய பொருளாதார வீழ்ச்சியில் இதுவொரு சாதாரன காரணியாகும். | உறுதிப்படுத்துவதற்காக ஊழியர் புரள்வினை குறைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iii) | 2022 ஆம் ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு பிரிவில் ஒன்பது (9) வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. வெற்றிடங்களினை நிரப்புவதற்காக உரிய அதிகாரிகளினால் திருப்திகரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | விடயம் ஏற்கனவே கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. | முன்னுரிமை அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| **பதவி** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **2022/12/31 இல் உள்ளவாறான உண்மையான பதவியணியினர்** | **வெற்றிடங்கள்** |
|---|---|---|---|
| உதவி பொது முகாமையாளர் | 1 | 1 | - |
| பிரதம முகாமையாளர் / பிராந்திய முகாமையாளர் | 1 | - | 1 |
| சிரேஷ்ட முகாமையாளர் | 2 | 2 | - |
| உதவி முகாமையாளர் | 1 | - | 1 |
| நிறைவேற்று உத்தியோகத்தர் | 4 | 4 | - |
| கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் | 3 | 1 | 2 |
| ஊழியர் உதவியாளர் | 8 | 3 | 5 |
| **மொத்தம்** | **20** | **11** | **9** |

*பின்னிணைப்பு I*

| இல | வாகன இலக்கம் | அகற்றல் திகதி | வழங்கிய மொத்தம் (அ) | அறவிடப்பட்ட மொத்தம் (ஆ) | வாகனத்தினை அகற்றிய பிற்பாடும் அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை (அ – ஆ) |
|---|---|---|---|---|---|
| 1 | டபில்யுபி எவ்செட்-0186 | 2022/07/29 | 2,997,680.00 | 1,442,737.40 | 1,554,942.60 |
| 2 | எஸ்பி என்டி-2687 | 2022/03/14 | 5,800,000.00 | 4,692,888.37 | 1,107,111.63 |
| 3 | டபில்யுபி எல்வை-1812 | 2022/03/28 | 3,325,000.00 | 2,509,135.75 | 815,864.25 |
| 4 | என்சி ஆர்எவ-2869 | 2022/03/28 | 1,575,000.00 | 766,459.16 | 808,540.84 |
| 5 | 48-0145 | 2022/02/21 | 840,000.00 | 39,451.14 | 800,548.86 |
| 6 | டபில்யுபி எச் டபில்யுபி-6738 | 2022/12/14 | 1,280,000.00 | 499,863.13 | 780,136.87 |
| 7 | என்சி ஆர்எவ்-4213 | 2022/12/19 | 900,000.00 | 121,150.00 | 778,850.00 |
| 8 | 48-0985 | 2022/02/24 | 800,000.00 | 38,922.67 | 761,077.33 |
| 9 | டபில்யுபி என்எவ்-5335 | 2022/03/23 | 7,000,000.00 | 6,265,304.86 | 734,695.14 |
| 10 | டபில்யுபி எச்ஓ-7160 | 2022/07/27 | 1,150,000.00 | 447,442.22 | 702,557.78 |
| 11 | டபில்யுபி என்ஏ-9082 | 2022/07/29 | 1,700,000.00 | 1,050,609.60 | 649,390.40 |
| 12 | டபில்யுபி ஆர்எவ்-6010 | 2022/03/23 | 1,295,000.00 | 669,344.88 | 625,655.12 |
| 13 | டபில்யுபி என்ஏ-1690 | 2022/02/21 | 1,540,000.00 | 918,106.40 | 621,893.60 |
| 14 | என்சி ஆர்எவ்-3856 | 2022/08/10 | 1,100,000.00 | 527,086.24 | 572,913.76 |
| 15 | 63-4268 | 2022/07/28 | 1,350,000.00 | 802,695.79 | 547,304.21 |
| 16 | டபில்யுபி எல்ஓ-1544 | 2022/08/02 | 4,600,000.00 | 4,122,096.81 | 477,903.19 |
| 17 | 62-9993 | 2022/02/21 | 1,850,000.00 | 1,384,591.78 | 465,408.22 |
| 18 | டபில்யுபி என்டி-5330 | 2022/01/31 | 1,800,000.00 | 1,354,115.58 | 445,884.42 |
| 19 | எஸ்பி ஜீடி-7693 | 2022/01/26 | 1,263,000.00 | 843,855.74 | 419,144.26 |
| 20 | சிபி என்பி-2357 | 2022/02/24 | 1,500,000.00 | 1,105,591.15 | 394,408.85 |
| 21 | எஸ்பி என்டி-3552 | 2022/02/24 | 5,600,000.00 | 5,208,395.44 | 391,604.56 |
| 22 | 48-9828 | 2022/02/22 | 625,000.00 | 286,563.41 | 338,436.59 |
| 23 | 48-0964 | 2022/02/25 | 725,000.00 | 426,700.53 | 298,299.47 |
| 24 | எஸ்பி ஜீஎச்-0844 | 2022/01/24 | 1,025,000.00 | 762,814.96 | 262,185.04 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | யூபி என்ஏ-3957 | 2022/02/23 | 1,100,000.00 | 841,902.32 | 258,097.68 |
| 26 | யூபி கியுஎல்-8337 | 2022/01/31 | 528,000.00 | 272,927.94 | 255,072.06 |
| 27 | சிபி எஸ்ஓ-7090 | 2022/02/24 | 235,000.00 | 35,962.85 | 199,037.15 |
| 28 | 62-5118 | 2022/07/26 | 700,000.00 | 517,321.06 | 182,678.94 |
| 29 | என்டபில்யு பிஎச்ஏ-5280 | 2022/01/25 | 209,930.00 | 50,784.22 | 159,145.78 |
| 30 | சிபி வைஜீ-2159 | 2022/02/25 | 280,000.00 | 128,339.16 | 151,660.84 |
| 31 | எஸ்பி பீஈஎல்-1982 | 2022/01/25 | 484,000.00 | 336,206.17 | 147,793.83 |
| 32 | டபில்யுபி ஜீஎன்-7046 | 2022/10/31 | 328,000.00 | 199,753.17 | 128,246.83 |
| 33 | சீபீ பீஜீவை-6290 | 2022/05/27 | 181,930.00 | 57,467.18 | 124,462.82 |
| 34 | என்டபில்யு பீஎச்எல்-1330 | 2022/03/22 | 138,530.00 | 20,784.13 | 117,745.87 |
| 35 | எஸ்பி ஏஏ-3347 | 2022/01.·.25 | 245,000.00 | 147,909.66 | 97,090.34 |
| 36 | டபில்யுபி சைஎம்-6018 | 2022/01/26 | 330,000.00 | 249,672.47 | 80,327.53 |
| 37 | டபில்யுபி வைகே-9314 | 2022/02/23 | 330,000.00 | 269,180.88 | 60,819.12 |
| 38 | டபில்யுபி வைடி-6120 | 2022/02/23 | 280,000.00 | 219,279.15 | 60,720.85 |
| 39 | என்பி எல்ஜே-6670 | 2022/01/25 | 830,000.00 | 791,992.06 | 38,007.94 |
| 40 | ஈபி பீஈகே- 5654 | 2022/01/25 | 164,100.00 | 135,413.91 | 28,686.09 |
| 41 | டபில்யுபி ஜேடபில்யூ-5909 | 05/07/2022 | 1,540,000.00 | 1,535,715.35 | 4,284.65 |
| 42 | என்டபில்யூ டிஏபீ-0377 | 25/05/2022 | 770,000.00 | 768,236.51 | 1,763.49 |
| 43 | என்டபில்யூ ஜீஎல்-7931 | 2022/12/22 | 1,250,000.00 | 1,248,367.94 | 1,632.06 |
| | **மொதத்தம்** | | **61,565,170.00** | **44,113,139.14** | **17,452,030.86** |